**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**CUDDALORE DISTRICT, CUDDALORE**

**<u>C.C.No.72 of 2024</u>**

அரசுதரப்பு **5 -**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **மாதவன்** | வயது | : | 51 |
| தந்தை பெயர் | : | **ஆறுமுகம்** | தொழில் | : | **விவசாய கூலிவேலை** |
| கிராமம் | : | **வண்டிபாளையம்** | ஜாதி | : | ------- |
| தாலுக்கா | : | **கடலூர்** | சமயம் | : | ------- |
| மாவட்டம் | : | **கடலூர்** | மொபைல் | : | 9150905104 |

Solemnly affirmed in accordance with the provisions of Act XIV of 1967 விதிமுறைகளின்படி 12.05.2026 நாளாகிய இன்று செல்வி**. R.**தனம்**, B.A., B.L.,** தலைமை நீதித்துறை நடுவர்**,** கடலூர்**,** அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(**<u>எதிரி முன்னிலை, வழக்கறிஞர் முன்னிலை</u>**)**

<u>முதல் விசாரணை:</u>

நான் வண்டிபாளையத்தில் குடியிருக்கிறேன். இறந்த கோகுலை தெரியும். 06.09.2023 அன்று நான் வண்டிபாளையத்தில் வேலை செய்துகொண்டிருந்தேன். காலை சுமார் 10.30 மணியளவில் எனக்கு போன் மூலம் கோகுல் அடிபட்டுவிட்டதாக தகவல் சொன்னார்கள். நான் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்துவிட்டு கடலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அங்கிருந்து கோரிமேட்டிற்கு கோகுலை அழைத்து சென்று விட்டார்கள். அங்கு நான் சென்றபிறகு கோகுல் இறந்துவிட்டதாக கூறிவிட்டார்கள். மறுநாள் காலை போலிசார் பிரேத விசாரணை செய்தபோது உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை-இல்லை</u>**.**

/ஒம்.இரா.தனம்/

தலைமை நீதித்துறை நடுவர்,

கடலூர்

**(Chapter XXII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**CUDDALORE DISTRICT, CUDDALORE**
**C.C.No.72 of 2024**

அரசுதரப்பு **6 -**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **கன்னியப்பன்** | வயது | : | 32 |
| தந்தை பெயர் | : | **தண்டபாணி** | தொழில் | : | **விவசாய கூலிவேலை** |
| கிராமம் | : | **வண்டிபாளையம்** | ஜாதி | : | ------- |
| தாலுக்கா | : | **கடலூர்** | சமயம் | : | ------- |
| மாவட்டம் | : | **கடலூர்** | மொபைல் | : | 9566949448 |

Solemnly affirmed in accordance with the provisions of Act XIV of 1967 விதிமுறைகளின்படி 12.05.2026 நாளாகிய இன்று செல்வி**. R.**தனம்**, B.A., B.L.,** தலைமை நீதித்துறை நடுவர்**,** கடலூர்**,** அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(**எதிரி முன்னிலை**,** வழக்கறிஞர் முன்னிலை**)**

முதல் விசாரணை:

நான் வண்டிபாளையத்தில் குடியிருக்கிறேன். இறந்த கோகுலை தெரியும். எனது ஊர்க்காரர். 06.09.2023 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் நான் என் ஓனர் வீட்டிற்கு செல்வதற்காக பார்வதி ஆயில்மில் அருகே ரோட்டின் இடது ஓரமாக நின்றுகொண்டிருந்தேன். அப்போது அம்பேத்கர் நகரில் இருந்து திருப்பாபுலியூர் நோக்கி Honda இருசக்கர வாகனத்தில் கோகுல் சென்றபோது அவருக்கு பின்னால் வந்த பல்சர் வண்டி அவர் வண்டி மீது மோதியது. திருப்பாபுலியூரில் இருந்து வண்டிபாளையம் நோக்கி வந்த Scooty பார்வதி ஆயில் மில் பக்கம் கடந்து சென்றபோது கோகுல்ராஜ் வண்டியில் மோதியது. அதில் கோகுல்ராஜ் கீழே விழுந்து தலையில் ரத்தம் வந்தது. நானும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்களும் உடனடியாக சென்று அவரை ஆட்டோவில் ஏற்றிவிட்டேன். மறுநாள் காலை கோகுல் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். Scooty பதிவெண் தெரியாது. அதை ஓட்டி வந்தவர்கள் அடையாளம்

தெரியுமா என்றால் கணவன் மனைவியாக வந்தார்கள். தற்போது நினைவில்லை. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>

போலிசார் என்னை சம்பவம் நடந்த அன்றே மாலை விசாரித்தார்கள். யாருடன் அடிபட்டவரை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன் என்றால் கோகுலின் உறவினர்கள் இரண்டு மூன்று பேர் இருந்தார்கள், அவர்களுடன் அனுப்பி வைத்தேன். அந்த இரண்டு மூன்று பேர் என்ன உறவுமுறை என்று எனக்கு தற்போது தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கும்போது "திருப்பாபுலியூரில் இருந்து வண்டிபாளையம் நோக்கி வந்த Scooty பார்வதி ஆயில் மில் பக்கம் கடந்து சென்றபோது கோகுல்ராஜ் வண்டியில் மோதியது.” Scooty பதிவெண் தெரியாது. அதை ஓட்டி வந்தவர்கள் அடையாளம் தெரியுமா என்றால் கணவன் மனைவியாக வந்தார்கள், என்ற விவரத்தை கூறினேனா என்றால் கூறினேன். போலிஸ் விசாரணையில் நான் சத்தம் கேட்டு வந்ததாக கூறவில்லை. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. Scooty வாகனம் ரோட்டை கடந்து சென்று மோதிவிட்டது என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை-இல்லை</u>

/ஒம்.இரா.தனம்/
தலைமை நீதித்துறை நடுவர்,
கடலூர்

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**CUDDALORE DISTRICT, CUDDALORE**

**<u>C.C.No.72 of 2024</u>**

அரசுதரப்பு **7 -**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **சந்தோஷ்** | வயது | : | 41 |
| தந்தை பெயர் | : | **ஆனந்தன்** | தொழில் | : | **தனியார் நிதிநிறுவன வேலை** |
| கிராமம் | : | **வண்டிபாளையம்** | ஜாதி | : | ------- |
| தாலுக்கா | : | **கடலூர்** | சமயம் | : | ------- |
| மாவட்டம் | : | **கடலூர்** | மொபைல் | : | 9791002658 |

Solemnly affirmed in accordance with the provisions of Act XIV of 1967 விதிமுறைகளின்படி 12.05.2026 நாளாகிய இன்று செல்வி**. R.**தனம்**, B.A., B.L.,** தலைமை நீதித்துறை நடுவர்**,** கடலூர்**,** அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(**<u>எதிரி முன்னிலை, வழக்கறிஞர் முன்னிலை</u>**)**

முதல் விசாரணை:

நான் வண்டிபாளையத்தில் குடியிருக்கிறேன். இறந்த கோகுலை தெரியும். 06.09.2023 அன்று அம்பேத்கார் நகரில் இருந்து திருப்பாபுலியூருக்கு கடைக்கு Honda Shine இருசக்கர வாகனத்தில் கோகுல் செல்லும்போது பார்வதி ஆயில் மில் வாசல் எதிரில் செல்லும்போது கணவன் மனைவி Scooty யில் ரோட்டை கடக்கும்போது கோகுல் வண்டிக்கு பின்னால் வந்த Pulsar வண்டியும் ஒன்றுக்கொன்று மோதியதில் கோகுலுக்கு தலையில் அடிபட்டு விட்டதாக கேள்விபட்டு கடலூர் அரசு

மருத்துவமனைக்கு சென்றேன். மேல்சிகிச்சைக்காக கோரிமேட்டிற்கு சென்றார்கள். அதன்பிறகு கோகுல் இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. நான் முதல்விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் போலிசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் உண்மையை மறைத்து கூறப்பட்டவை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை-இல்லை</u>

/ஓம்.இரா.தனம்/
தலைமை நீதித்துறை நடுவர்,
கடலூர்